DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S. No.124/2025

Plaintiff side witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... சாந்தகுமாரி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.03.2026**

<u>முதல்விசாரணை:–</u>

நான் வழக்கில் வாதி ஆவேன். பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அது என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. அதில் உள்ள விவரங்கள் நான் அறிந்தவகையில் உண்மையானவை. 11.12.2023 தேதியிட்ட பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ-1, 04.10.2023 தேதியிட்டு தூத்துக்குடி சார்பு நீதிமன்றம் E.P.No.111/2019 வழக்கின் 04.10.2023 தேதியிட்ட நீதிமன்ற நடவடிக்கையை காட்டக்கூடிய ஆவணம் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ-2, 02.08.2024 தேதியிட்ட தபசில் சொத்தை பொறுத்த புல வரைபடம் மற்றும் டவுண் சர்வே ரிஜிஸ்டர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-3, 24.04.2025 தேதியிட்ட தபசில் சொத்தை பொறுத்து 13.04.2018 முதல் 23.04.2025 வரையிலான வில்லங்க சான்றிதழ் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ-4, 23.01.2025 தேதியிட்டு பிரதிவாதி மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

அவர்களிடம் கொடுத்த புகார் மனு அலுவலக நகல் வா.சா.ஆ- 5, 29.01.2025 தேதியிட்டு மேற்படி புகார்மனுவிற்கு தூத்துக்குடி தென்பாகம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது அசல் வா.சா.ஆ- 6, 29.03.2025 தேதியிட்டு வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ-7, 02.04.2025 தேதியிட்டு பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ-8, பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.